# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
கலை இதழ்
விலை 20 காசு



## செம்மை வாழ்வு


பார்வையில் கூர்மை கொள்!
பணிகளில் சீர்மை காண்!
பற்றற்ற தொண்டினில் நேர்மைகில்!


ஆர்வமும் முயற்சியும்
அயர்வில் லாமையும்
ஆக்கத்தில் ஊக்கமும் கொண்டிடு!

நேர்வதில் மகிழ்வுகொள்!
நிகழ்வதில் முனைந்திரு!
நேரவிருப்பதில் கருத்துவை

சேர்வன சேரட்டும்!
சிறப்பன சிறக்கட்டும்!
செம்மை வாழ்வு இதுவென நிறைவுகொள்

குரல்: 2. இசை: 9.





# உலகம் சுற்றுவோம்

## மிகச்சிறிய தீவு.

உலகிலேயே மிகச்சிறிய தீவு எது தெரியுமா? 'செருமனி' நாட்டிலிருக்கும் ' குரோட்டு' என்னும் தீவுதான். இதன் மக்கள் தொகை இருபத்து இரண்டுபேர்களே தாம். இத்தீவில் தான் உலகிலேயே மிகச் சிறியபள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. இதற்கு ஒருபெண்மணிதான் ஆசிரியை; தலைமை ஆசிரியை எல்லாம். இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? வியப்படையாதீர்! இரண்டு. ஆம், ஏழு அகவைகள் நிரம்பிய 'வால்கர்' என்ற ஒரு மாணவனும், அவனுடைய தங்கை ஒருத்தியும்தாம் இந்தப்பள்ளியில் படிக்கின்றனர்.

## அறிவியல் புதுமை!

சதுர வடிவில் தக்காளிப்பழம்; கற்கண்டு துணுக்குகள் போல் கொடிமுந்திரி (திராட்சை)ப் பழம், சீவலாக ஆப்பிள்பழம். இஃது என்ன உளறல் என எண்ணுகிறீர்களா? இவையெல்லாம் உண்மைதாம். அமெரிக்காவில்உள்ள 'பெல்ட்சுவில்' வேளாண்மை ஆராய்வுப்பண்ணையில்தான் மேற்கூறிய முறையில் பழங்கள் விளைகின்றனவாம். அந்தப் பண்ணையில் நீலவண்ணத்திலும் வெள்ளியைப்போன்ற வண்ணத்திலும் கூட முளரி (Rose) பூக்கின்றனவாம். என்னே வியப்பு!

## காலத்தின் கோலம்.

சப்பானில் இன்று 'தீநீர்க்' கடைகள் மிகுதியாய் ! உள்ளன. 'தோக்கியோ'வில் மட்டும் 9,000கடைகள் இருக்கின்றன. 'தீநீர்' அருந்தும் நேரத்தை வீணாக்காமலிருக்கப் பல கடைகளில் புத்தகங்களும், தாளிகைகளும் உள்ளன. ஒரு கடையில் இளம் பெண்கள் கதைசொல்லுகின்றனர். மற்றொரு கடையில் 'தீநீர்' அருந்தும் நேரத்தில் உங்கள் சட்டை சலவை செய்து தரப்படுகிறது. இன்னும் ஒரு கடையில் குளித்துக்கொண்டே தீநீர் அருந்தலாம். ஒருகடையில் தூங்குவதற்கு ஏந்துகள் ( வசதி ) செய்யப்பட்டுள்ளன. தனிஅரை மிசைப்பலகை, தொலை பேசி ஆகியன தருகிறது ஒரு கடை. காலத்தின் கோலத்தைப் பாருங்கள்!

( தொகுப்பு: நாற்றமிகு செம்பியன் )

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-2 | தி. பி. ௧௯௯௯ மேழம் (சித்திரை) மே-68 | இசை-9


## பள்ளிக்குத் தாழ்ப்பாள் உண்டு! கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை!

பள்ளிப் பிள்ளையே! பள்ளிப் பிள்ளையே!
பள்ளி திறந்தது; பள்ளிப் பிள்ளையே!
திறந்த பள்ளிக்குச் சிட்டுக் குருவிபோல்
பறந்து செல்லும் பள்ளிப் பிள்ளையே!

உனக்கொன்று சொல்வேன்; உற்றுக் கேட்பாய்!
உனக்கென விழிகள் உள்ளன; அவைமேல்
துருதுருவென, இரண்டு இமைகள் உள்ளன.
விருப்ப மில்லாப் பொழுதில்உன் இமைகள்
விழிப்பல கணிகளை மூடிக் கொள் கின்றன!
காட்சி அறிவுக்குக் கதவிடு கின்றன!


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

ஆனால் உன்றன், மனமும் மூளையும்
சும்மா இருக்குமா சொல்லுக தம்பி!

இம்மா பெரிய உலக உருண்டையில்
எத்தனைப் பொருள்கள்! எத்தனை அறிவு!
எத்தனை மலைகள்! எத்தனைக் கடல்கள்!
தோற்றங்கள் எத்தனை! மாற்றங்கள் எத்தனை!
ஊற்றுகள், ஆறுகள், உழுதநன் னிலங்கள்,
நிலத்திணை வகைகள், பறவைகள், விலங்குகள்,
அலைந்து திரியும் மக்கள் கூட் டங்கள்—

அத்தனைப் பொருள்களும் அவற்றின் கதைகளும்
எத்தனைப் பெரிய அறிவுப் பொத்தகம்!
இயற்கை என்பதோ இணையிலாக் கல்விநூல்!
உலகம் என்பதோ விரிந்த சுவடி!
உலகைச் சுற்றிலும் பெருவிரி வானம்!
விரிந்த வானில் எண்ணிலா விண்மீன்!
பரிதிகள், கோள்கள், பாழ்வெளி மண்டிலம்!
அடடா! தம்பி எங்கணும் அறிவே!

செயற்கைப் பொத்தகம் மூடிக்கிடக்கும்!
இயற்கைப் பொத்தகம் மூடுவ தில்லை!
செயற்கைப் பொத்தகம் நாம்எழு தியது!
இயற்கைப் பொத்தகம் இறைவன் வரைந்தது!
இல்லத்து வாயிற்கு இடுகின்றோம் கதவு!
கல்வி வானிற்குக் கதவேது தம்பி?

அடித்துக் கொண்டே இருக்கும் காற்றுப்போல்
படித்துக் கொண்டே இருக்கும் உள்ளம்!
வெள்ளப் பெருக்குப்போல் அறிவுப் பெருக்கு
உள்ளம் என்பதோ இமையிலா ஒளிவிழி!
மூடுதல் இல்லா உள்ளத்து விழிகள்
ஏடு ஏடாக இயற்கையைப் படிக்கும்
பள்ளிக் கூடம்இப் பரந்த உலகம்!
கல்வி என்பதோ மக்களின் வாழ்க்கை!

செயற்கைப் பள்ளிக்கு விடுமுறை உண்டு!
இயற்கைப் பள்ளிக்கு விடுமுறை இல்லை!

காலையும் மாலையும் கதிரவன் காணலாம்!
சோலையில் ஆற்றில் ஊர்ந்து திரியலாம்!
பட்டுப் பூச்சிபோல் மின்னிப் பறக்கலாம்!
சிட்டுக் குருவிபோல் வானை அளாவலாம்!
கடலுள் மூழ்கலாம்! மலைமேல் ஏறலாம்!
உடல் அயர்ந்தாலும் உளம் அயராது!

படிப்பு; படிப்பு; அயர்விலாப் படிப்பு!
துடிக்கும் உலகத்திற்கு ஓய்வேது தம்பி!
விழிகளைத் திறந்துவை! செவிகளை நீட்டு!
வழியில் கிடைக்கும் அறிவெலாம் வாரி உண்!
மனத்தை மூடாதே! அறிவெனும் சிறகால்
மனத்தைத் தூக்கி வானெலாம் திரிந்துவா!
நிலவுக்குப் போய்வா! விண்மீன்கள் எண்ணு!
உலகத் தரைமேல் உருண்டு புரண்டுவா!
வெண்முகில் படுக்கை எப்படி தெரியுமா?
பஞ்சுப் படுக்கை தோற்றது போயேன்!
வெயிலில் காய்ந்த சருகென உலர்வாய்!
புயலில் மழையில் புழுதியாய் நனைவாய்!

அடடா தம்பி அயர்வில்லாத
இயற்கையின் படிப்பை என்னென்று சொல்வேன்?

பள்ளிக்குத் தாழ்ப்பாள் உண்டு!
கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை! கண் மணியே!

—பெருஞ்சித்திரன்.

**தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.**
தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

**மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.**

| | உள்நாடு. | வெளிநாடு, கொழும்பு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் உருபா. | 2-50 | 4-00 |
| தனியிதழ் ,, | 0-20 | 0-30 |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

தொடர்ச்சி: 3 உருவகப் பாட்டு:

# கழுதை அழுத கதை.

**துரை-மாணிக்கம்**

''இக்காளை மாட்டுக்(கு)
இருக்கும் பெருமையிலே
ஒக்கவே ஆயிரத்தில்
ஒன்று கிலும் நமக்கு
வாய்த்திருக்கு மாகுல்
வளர்மகளே! நம்வாழ்க்கை
காய்த்துக் குலுங்கும்
கனிமரமாய் நின்றிருக்கும்!
பூத்துக் குலுங்குகின்ற
பூச்செடிபோல் வாழ்விருக்கும்!

காத்துக் கிடக்கின்ற
பட்டாளக் காவலிடை
திண்கால் அரியணையில்
தேர்ந்தஅறி வாளரிடை
வெண்குடைக்கீழ் வீற்றிருக்கும்
வேந்தனைப்போல் நானிருப்பேன்!

அப்பெருமை என்ன?
அருமையென்ன? நாம்பெற்ற
இப்பாழ் பிறவிபோய்
ஏழ்பிறவி கண்டாலும்
மாடாய்ப் பிறக்குமொரு
மாண்புவந்து வாய்த்திடுமோ?
வாடாத மேனியுடன்
வாழ்ந்திருக்க மாட்டோமா?
என்றபடி தாய்க்கழுதை
ஏங்கிடவும்; குட்டியோ
''என்னதான் அப்பெருமை''
என்றே வினவிற்று.

''என்னவென்று கேட்கின்ருய்''
நீ சிறுபெண் ஏதறிவாய்?

ஒன்றுநான் முன்னர்
உரைக்கின்றேன்; உற்றுக்கேள்.

பச்சைப் பசும்புல்லை
உண்டு, நல்ல பாலாக்கி
இச்சிச் செனமாந்தர்
எல்லாரும் உண்டிடவே,
மாட்டினத்துப் பெண்கள்
மடிநிரம்பச் சாய்ப்பதினைக்
கேட்டிருப்பாய்; சிற்சிலகால்
கண்ணாலும் கண்டிருப்பாய்!

நாமுந்தாம் புல்லுண்போம்;
நம்பாலை யார்குடிப்பார்?
'ஊம்'என்று கேள்நீ?
உனக்குப் புரிகிறதா!
நம்பிறவி தாழ்ச்சியென்று
நானிலத்தார் எண்ணிவிட்டார்.
'இம்'என்று கேட்டுவா!
இன்னும் பலசொல்வேன்!

புல்லுண்ட மாட்டின்
பொதபொதக்கும் சாணியைப்போய்
மெல்லென்னும் பூங்கையால்
மேனி சிலிர்க்காமல்
நீரில் கரைத்து
நெடுமுன்றில் வாயிலெல்லாம்
தீரத் தெளிக்கின்றார்
பெண்கள்; தெரிந்திருப்பாய்!
ஆனால் இதுபற்றி
ஆராய்ந்து பார்த்தாயோ?
ஏன் அதுபோல் நம்மின்
எருவைக் கருதவில்லை?
நம்பிறவி மட்டமென்று
நாட்டுமக்கள் எண்ணிவிட்டார்.

'இம்'என்று கேட்டால்தான்
பேச்சில் இனிப்பிருக்கும்.

மாட்டுப் பிறவி!
மதிப்பான ஓர்பிறவி
வீட்டிலுள்ள செல்வமென்றும்,
தெய்வமென்றும் மக்களெல்லாம்
போற்றிப் புகழும்
புகழ்ச்சியிங்கு யார்க்குண்டு?
காற்றுவழி யாலும்நம்
காதில் விழுவதுண்டோ?
நூற்றுக் கணக்காய்
மாட்டை விலைகேட்பார்!
தூற்றி இருப்பதுக்கே
தோதுபடோம் நாம்என்பார்!

ஆண்டுக் கொருநாள்
அதற்கென்று பொங்கலிட்டு
நீண்டுயர்ந்த கொம்புகளைச்
சீவிமிகக் கூராக்கி
வண்ணமிட்டுக் கொப்பியிட்டு
வார்த்தமணி மாலையிட்டுக்
கிண்கிணியும் கட்டிக்
கிழமாடே ஆனாலும்
பாராட்டிக் கொண்டாடும்
பாங்கைஎங்கும் கண்டிருப்பாய்?
சீராட்டி நம்மை
ஒருநாள் குளிப்பாட்டும்
நல்லஒரு மாந்தனையும்
நாம்கண்ட தில்லையே!
தொல்லைதரா நாள்இருப்பின்
நமக்குத் திருநாளே!

பொல்லாத பிள்ளைகள்முன்
போய்விட்டால் போதுமே!

எல்லார்க்கும் நாமே
இளைக்காரம் என்பதுபோல்
ஒட்டைத் தகரத்தை
ஓர்பையன் வால்பிணிப்பான்!
மூட்டைப் பொதிபோல் ஓர்
மூடன் முதுகமர்வான்!
ஓட்டுஓட் டென்றுஒருவன்
கால்கட்டி ஓட்டிடுவான்!
ஆட்டமென்ன? பாட்டென்ன?
ஆலோலக் கொட்டென்ன?
மூச்சுமுட்ட, கால்களெல்லாம்
முட்டுடையத் தோல்கழலக்
காச்சுகாச் சென்று
குரல்வற்றிக் கத்திடினும்
வேடிக்கை கண்டே
விலாவலிக்கச் சிரிப்பதல்லால்
ஓடிக்கை நீட்டி
உயிர்மீளச் செய்பவர்யார்?

ஏன் இதுபோல் நம்மேல்
இரக்கமிலை; எண்ணினையா?
ஊன்பிறவி தன்னில், நாம்
ஊத்தைப் பிறவியடி!
'இம்'மென்று கேள்நீ!
இதற்குமொரு தோதுசொல்வேன்!
அம்மா! நான் உன்னை
அரசாளச் செய்திடுவேன்!

(தொடரும்)

குறிப்பு: இக்கதை சிறியோரும் பெரியோரும் படிக்கவேண்டிய ஓர் உருவகக் கதை. இதில் சிறுவர்களுக்குப் புரியாத சில சொற்கள் வந்திருப்பின் பெரியோர்களும் ஆசிரியர்களும் அவற்றை நன்கு படித்துக் காட்டி விளக்க வேண்டுகிறோம்.



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

புலவர் தி. நா. அறிவுஒளி,

பெரும்பாலும் பயிலும் சொற்பிழை, சொற்றொடர்ப் பிழைகளையும், அவற்றிற்குரிய திருத்தத்தையும் இங்குக்காண்க:

| பிழை | திருத்தம் |
|---|---|
| அன்னாடு | அந்நாடு |
| பொந்நாடு | பொன்னாடு |
| என்னாளும் | எந்நாளும் |
| பொருட்கள் | பொருள்கள் |
| இதுவல்ல | இதுவன்று |
| இவையன்று | இவையல்ல. |
| பலபேர் இருக்கிறார்கள் | பலர் இருக்கின்றனர். |
| சில அறிவாளிகள் | அறிஞர் சிலர் |
| துணிகள் உளது, | துணிகள் உள. |
| சேலைஉள | சேலையுளது. |
| என்னுடைய மகள் | எனக்கு மகள் |
| எனது மகள் | என்மகள். |
| என்னும் எழுத்தும் | எண்ணும் எழுத்தும் |
| என்ற குறளை | என்னும்குறளை |

| பிழை | திருத்தம் |
|---|---|
| இரண்டுகண்கள் | இருகண்கள் |
| ஒருவரும்கிடையாது | ஒருவரும்இலர். |
| சிலபிள்ளைகள் | பிள்ளைகள்சிலர். |
| நல்லவனாய்நடப்பேன் | நல்லவனாய் நடந்தேன். |
| நல்லவனாக நடந்தேன் | நல்லவனாக நடப்பேன். |
| மரங்கள்விழுந்தது | மரங்கள்விழுந்தன. |
| தமக்கைவந்தது | தமக்கை வந்தார் (ள்). |
| அண்ணன் இருக்கிறது. | அண்ணன் இருக்கிறான். |
| மாடுகள்மேயாது. | மாடுகள்மேயா. |
| படித்தவன்அல்ல | படித்தவன் அல்லன். |
| அவனல்லவா? | அவன் அல்லனா? |
| இவளல்லவோ? | இவளல்லளோ? |
| அவரல்லவா? | அவரல்லரோ? |
| பழங்கள்பெரியது | பழங்கள் பெரியன. |
| பெற்றோர் தன் மக்கள் | பெற்றோர் தம் மக்கள். |

| | | | |
|---|---|---|---|
| அகண்ட | அகன்ற | கோர்வை | கோவை |
| அடமழை | அடைமழை | சமயல் | சமையல் |
| அடமானம் | அடைமானம் | சிகப்பு | சிவப்பு |
| அண்ணாக்கயறு | அரைஞாண் கயிறு | சுவற்றில் | சுவரில் |
| | | தண்ணி | தண்ணீர் |
| அமக்களம் | அமர்க்களம் | தலகாணி | தலையணை |
| அதுகள் | அவை | தாவாரம் | தாழ்வாரம் |
| அரும்பு | அழிம்பு | திருவாணி | திருகாணி |
| ஆச்சி | ஆட்சி | தீவட்டி | தீவர்த்தி |
| இடைபோடு | எடைபோடு | துகையல் | துவையல் |
| இதுகள் | இவை | துடப்பம் | துடைப்பம் |
| இரும்பல் | இருமல் | துடை | தொடை |
| உடமை | உடைமை | தொந்திரவு | தொந்தரவு |
| எடஞ்சல் | இடைஞ்சல் | தொப்புள் | கொப்பூழ் |
| எண்ணெ | எண்ணெய் (எள்–நெய்) | நன்சை | நன்செய் |
| | | நாகரீகம் | நாகரிகம் |
| என்னமோ | என்னவோ | பதட்டம் | பதற்றம் |
| ஒண்டியாய் | ஒன்றியாய் | பத்துவரவு | பற்றுவரவு |
| ஒத்தடம் | ஒற்றடம் | பயிறு | பயறு |
| ஒருத்தன் | ஒருவன் | பன்னண்டு | பன்னிரண்டு |
| ஒருவள் | ஒருத்தி | புடவை | புடைவை |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் | புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| கத்திரிக்காய் | கத்தரிக்காய் | புழக்கடை | புறக்கடை |
| கம்பிளி | கம்பளி | புழுக்கை | பிழுக்கை |
| கருப்பட்டி | கருப்புக்கட்டி | பூசினி | பூசணை |
| கரையான் | கறையான் | பொரளி | புரளி |
| கிணரு | கிணறு | மணத்தக்காளி | மணித்தக்காளி |
| குடக்கூலி | குடிக்கூலி | மாத்து | மாற்று |
| குத்துயிர் | குற்றுயிர் | மானம்பார்த்த நிலம் | வானம்பாரத்த நிலம் |
| குறியாப்பு | குறியெதிர்ப்பு | | |
| கெடியாரம் | கடிகாரம் | | |
| மாச்சி | மாட்சி | வென்னீர் | வெந்நீர் |
| முந்தாணி | முன்றானை | வெய்யுல் | வெயில் |
| வாக்கணம் | வார்க்கவேண்டும் | வைக்கல் | வைக்கோல் |
| | | கஞ்சிவரம் | காஞ்சிபுரம் |
| விரை | விதை | குன்னத்நூர் | குன்றத்தூர் |
| வெங்கலம் | வெண்கலம் | திருப்பாப்புலியூர் | திருப்பாதிரிப் புலியூர் |
| வெண்ணெ | வெண்ணெய் | | |

| | | | |
|---|---|---|---|
| பூந்தமல்லி | பூந்தண்மலி | மகாபலிபுரம் | மாமல்லபுரம் (கடல்மல்லை) |
| சீபெருமந்தூர் | திருப்பெரும்புதூர் | வெல்லூர் | வேலூர் |
| மதராசு | சென்னை | பல்லாவரம் | பல்லவபுரம் |
| | | சட்ராச் | சதுரங்கபட்டினம் |

அப்பம் சுட்டாள், வள்ளல் இரவலனுக்குப் பொன்ஈந்தான், மாணாக்கன் ஆசிரியர்க்குக் காணிக்கை கொடுத்தான், நீர்பருகினாள், ஆசிரியர் வாழ்த்துக் கூறினார், பூவும் அணியும் அணிந்து கொண்டு அவள் புறப்பட்டாள், மாட்டுத் தொழுவம், ஆட்டுப்பட்டி, யானைக் கூடம், உணவு விடுதி-எனச் சொல்லாட்சிகளை ஆளவேண்டும்.

எழுத்துப் பிழைகள் குறைய, அடிக்கடி சிறுசிறு கட்டுரைகள் எழுதித், தக்க ஆசிரியர்பாற் காட்டித் திருத்திக்கொள்வது நல்லது.

நல்லறிஞர்தம் நூல்களைப் படிக்கும்போது, அவர்கள் எழுதும் முறை, நடையழகு, சொற்களைப் பெய்யும் திறன், கருத்தை வெளியிடும் அழகு ஆகியவற்றைக் கூர்ந்து உற்றுநோக்கிக் கற்க வேண்டும்.

திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கு, எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய இலக்கியச் செல்வங்களை ஓதியுணர்ந்து இன்புறுவது இளைஞர் கடமையாகும். பாடல்களையும், இலக்கண நூற்பாக்களையும் மனப்பாடம் செய்தல் நனி இன்றியமையாதது.

தமிழ்நாட்டில் வெளியிடப்பெறும் பெரும்பான்மையான நாளேடுகள், கிழமை யிதழ்கள், திங்களிதழ்கள் பிழையான மொழி நடையில் அமைந்துள்ளன. சிறந்த கருத்தோ, ஒழுகலாற்று அறிவுரையோ, பண்பாட்டுணர்வோ, நாகரிகச் செய்திகளோ அவற்றில் வெளியிடப்படுவதில்லை. முறையாகத் தமிழ்கற்றுத்தெளியாதவர்கள் எழுத்தாளராகவும் இதழாசிரியராகவும் நேர்ந்த குற்றத்தினால் விளைந்த தீமையே இது! இத்தகு ஏடுகளை-இதழ்களை இளைஞரும் இளமகளிரும் வாங்குவதும் தீது; விரும்பிப் பயில்வதும் குற்றமாம்.

நல்ல புலமை மிக்க அறிஞர்கள் நடாத்தும் சிறந்த இலக்கிய விதழ்கள் பலவுள. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்ப் பொழில், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்நாடு, தமிழ்ப்பாவை, முப்பால் ஒளி, கலைக்கதிர், போலும் நல்லிதழ்களை மாணாக்கரும், ஆசிரியப்

பெருமக்களும், பெற்றோரும் வாங்கியும், வாங்குவித்தும்; கற்றும் கற்பித்தும் தொண்டு செய்ய வேண்டும்.

தாய்மொழி யறிவற்றவன் விழியற்றவனாவான். ஆகவே தமிழ்ப் பற்றோடு தமிழைக் கற்றல் மிகமிக இன்றியமையாததாகும். தமிழறிஞர்களின் சிறந்த நூல்களை இளைஞர் நிறையப் படிக்கவேண்டும்.

பேரறிஞர். மறைமலையடிகளார், பெரியார். திரு. வி. க, நாவலர் சோமசுந்தரபாரதியார், திரு. கா. சுப்பிரமணியனார், முதுபுலவர் மு. கதிரேசனார், திரு. ந. மு. வேங்கடசாமியார், மொழிப்பெரும் புலவர். ஞா. தேவநேயப்பாவாணர், அறிஞர். சி. இலக்குவனார், திரு. மா. இராசமாணிக்கனார், பண்டாரகர். மு. வரதராசனார், அறிஞர். வ. சுப. மாணிக்கம், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், பாவேந்தர், பாரதிதாசன், பாவலர். துரைமாணிக்கனார், பாவலர். இலெனின்–தங்கப்பா, பண்டாரகர். அ. சிதம்பரநாதனார், திரு. அழகரடிகள், பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார், திரு. ஔவை, துரைசாமியார், அறிஞர். சதாசிவபண்டாரத்தார், திரு. மகிழ்நன், திரு. அ. கி. பரந்தாமனார், முதலாகப் பல பேராசிரியர்கள் நடையாலும், கருத்தாலும் உயர்ந்த நூல்களை இயற்றியளித்துள்ளனர். அத்தகு பண்புள்ள சிறந்த நூல்களை மட்டும் தம்மிழிளைஞர் கற்றுச் சிறக்க வேண்டும். மொழியறிவும், ஆய்வறிவும், பண்பாடு, நாகரிகமும், ஒழுங்கு முறையும், தமிழ்மரபும், கலைநெறியும், எண்ணுமாற்றலும் பகுத்தறிவுத் திறமும் அற்ற போலி எழுத்தாளர்தம் நூல்களைக் கற்றலும் குற்றம்; காசு கொடுத்து வாங்குதலும் பெருங்குற்றமாகும், இனைய நன்னூல்களைப் பலமுறை இடையராது படித்துத் தமிழ் மாணக்கர் தமிழில் ஆழமான–அழுத்தமான–திண்ணிய புலமையடைவார்களாக! தனித்தமிழ்வெல்க!

தமிழகம் வாழ்க! ஞாலம் வாழ்க!

## உலக நாணயங்கள்.

நம்நாட்டு நாணயம் உருபா என்பது அனைவருக்கும் தெரியும். பிறநாடுகளில் உள்ள நாணயங்களின் பெயர்கள் தெரியுமா உங்களுக்கு...? கீழேபடியுங்கள்.

| | |
|---|---|
| சப்பான் — யென். | உருசியா — உரூபிள். |
| துருக்கி — லிரா. | ஆசுத்திரியா—சில்லிங். |
| பெல்சியம் — பெல்கா. | தென்மார்க்கு—கிரௌன். |
| கிரீசு — திரிக்மா. | அங்கேரியா —பெங்கோ. |
| மெக்சிகோ— பெலோ. | சுவீடன் — குரோண' |
| பாகித்தான்—உருபா. | பர்மா — சியாட்டு. |
| இலங்கை — வெள்ளி. | அமெரிக்கா— தாலர். |
| சீனம் — தாலர் (யென்) | பிரான்சு — பிராங்கு. |
| செருமனி —அரிசுமார்க். | இத்தாலி — லிரா. |
| மலேயா — தாலர். | இங்லாந்து — பவுன். |

( தொகுப்பு: நாற்றமிகு செம்பியன் )




# "சார்லசு டிக்கன்சு"

சே. இ. சேக்சுலைமான்.

ஏழ்மையில் பிறந்து, எளிமையில் வளர்ந்து ஊக்கத்துடன் படித்து, ஆங்கில நகைச்சுவை இலக்கியத்தில் தன்னுடைய முத்திரையை மிக ஆழமாகப் பதித்துப் புகழ்வாழ்வு வாழும் ஒருவரை உங்களுக்குத் தெரியுமா? அவர்தாம் சார்லசு டிக்கன்சு!

சார்லசு டிக்கன்சு இங்கிலாந்தில் உள்ள "போர்ட்சீ" என்னும் ஊரில் 1812-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7-ஆம் நாளன்று பிறந்தார். இவரின் தந்தை பெயர் சான் டிக்கன்சு. சான் ஒரு ஏழை எழுத்தராகக் (Clerk) கடற்படைத்துறையில் பணிபுரிந்து வந்தார். இவர் சிறு அகவையில் சார்லசுக்கும் அவர் தம்பி, தங்கைகளுக்கும் கதைகள் சொல்வார். இப்படிக் கதைகள் கேட்கும் பழக்கத்தால் சார்லசு கதை சொல்வதிலும் நகைச்சுவை செய்வதிலும் வல்லுநராகி விட்டார். பொது இடங்களில் இவரை மக்கள் நகைச்சுவை செய்யச் சொல்லி விலா நோகச் சிரிப்பார்கள். இதுவே இவர் பிற்காலத்தில் நகைச்சுவை எழுத்தாளராவதற்குப் போதிய திறமையுடையவர் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தது.

சார்லசுக்கு அப்பொழுது அகவை பதினொன்று. அவர் வீட்டில் குழந்தைகள் தொகை பெருகியதால் வருமானம் போதவில்லை. முடிவில் சான் கடன்பட்டுத் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். கடன்காரர்கள் சும்மா விடுவார்களா? அவர்கள் கடன்கேட்டு, கொடுக்க இயலாமையால் சானைக் கடன்பட்டோருக்கான, சிறை "மார்சல்சீ" என்ற இடத்தில் கடன்காரர்கள் அடைத்துவிட்டனர். சார்லசு இச் சிறுபருவத்திலேயே குடும்பக்கவலைகளெல்லாம் ஏற்கவேண்டியதாயிற்று. தன் தந்தையின் நிலையறிந்து வெட்கமடைந்தார்.

வறுமை இவரைவாட்டியது. இப்படியிருக்கையில் இவர் உறவினன் ஒருவன் இவருக்கு வேலை கொடுத்தான். கருப்பு மைக்குடுவை

யில் முத்திரைக் காகிதத்தை ஒட்டவேண்டிய வேலை. இவர் இந்த வேலையைத் திறமையாகச் செய்து, நல்லபெயர் எடுத்தார். அவருக்குக் கல்விமேல் அளவிடமுடியாத விருப்பம் ஏற்பட்டது. இருள் சூழ்ந்த அந்தத் தொழிற்சாலையில் முரடர்களுக்கு நடுவில், நூல்கள்படிக்கச் செலவு செய்யவேண்டிய நேரத்தை முத்திரைத் தாள்களைக் குடுவைகளின்மேல் ஒட்டிக் காலத்தை மனத்துயருடன் வீணடித்து வந்தார்.

சான் சிறைப்பட்ட "மார்சல்சீ" என்ற சிறையில் ஒரு சட்டமுண்டு. அஃதாவது அங்குச் சிறைப்பட்டோரின் சுற்றத்தார் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டால், சுற்றத்தார் சிறைப்பட்டோருடன் சிறை உள்ளேயே வாழலாம் என்பதே அச்சட்டம். தனியே குடும்பம் நடத்த இயலாமையால் சார்லசுவின் தாயார் தன் கணவருடன் சிறையிலேயே குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு வாழ்ந்து வந்தாள். ஆகையால், சார்லசுவின் குடும்பமே இச்சிறையில் வறுமையுடன் வாழ்ந்து வந்தது. ஆனால் சார்லசுமட்டும் வேலைக்குச் சென்றுவிடுவார். ஆகையால், அவர் ஞாயிற்றுக்கிழமை மட்டும் தன் குடும்பத்துடன் சிறையில் இருப்பார்.

உரிமையால் சானுக்கு கொஞ்சம் பணம் கிடைத்தது. அவர் அந்தப்பணத்தில் கொஞ்சம் எடுத்துக் கடனை அடைத்தார். அவரைக் கடன்காரர்கள் சிறையிலிருந்து விடுவித்தனர். இதே நேரத்தில் சார்லசுக்கு இருந்த வேலையும் போய்விட்டது. இது அவருக்குப் பெருமகிழ்வை அளித்தது; ஏனெனில், அவர் இனி ஒரு தடையுமின்றிக் கல்வி கற்கலாமன்றோ? அவரின் தந்தையும் அவரைக் கல்விக்கூடத்திற்கு அனுப்பி வைத்தார். சார்லசு, கல்விக்கடலில் இன்பமுடன் நீந்தி, அறிவென்னும் முத்துகளை எடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் இந்த இன்பம் நீடிக்கவில்லை. தந்தையின் பணம் கரையவே இவர் பள்ளியில் இருந்து நிறுத்தப்பட்டார். மீண்டும் வறுமையின் காரணமாக வேலைசெய்யும் நிலைக்கு வந்துவிட்டார்.

இவர் பள்ளியில் கொஞ்சம் படித்தமையால் வழக்கறிஞர் ஒருவரிடம் எழுத்தர் (Clerk) வேலை கிடைத்தது. இவர் தந்தை சுருக்கெழுத்து கற்றுச் செய்தியாளராகப் பணியாற்றினர். மகனும் தந்தை வழிச் சென்று சுருக்கெழுத்து கற்று "உண்மை மகன்" (True Son) "நாடாளு மன்றத்தின் கண்ணாடி" (Mirror of parliament) முதலிய இதழ்களுக்கு நாடாளுமன்றத்தின் செய்தியாளராகப் பணியாற்றினர் சில ஆண்டுகளில் இந்த இதழ்கள் நிறுத்தப்பட்டன. ஆகையால்

இவர்வேரோர் இதழில் பணியாற்றினர். இதன்மூலம் இவர் பேரூர் மக்கள், சிற்றூர் மக்கள் முதலியவர்களுடன் பழகும் வாய்ப்பேற்பட்டது. அவர்களுடைய பழக்கவழக்கங்கள், பேச்சுகள் முதலியவை இவர் மனத்தில் ஆழப்பதிந்தன. இவையெல்லாம் அவர் பிற்காலத்தில் ஒரு சிறந்த கதையாசிரியராகப் பெரிதும் உதவின.

இப்பொழுதுதான் இவருக்குப் பணக் கவலைகள் இல்லாமலிருந்தது. நீண்ட நாளாக இருந்த எழுதவேண்டும் என்ற அவா இப்பொழுது இவருக்குத் தலை தூக்கியது. முதன் முதலாக ஒரு கட்டுரை எழுதித் ''திங்கள் இதழ்'' (Monthely Magazine) என்ற தாளுக்கு நடுக்கத்துடன் அனுப்பிவைத்தார். அது வெளிவந்தது. ஈன்ற தாய் தன் குழந்தையைப் பார்த்து மகிழ்வதுபோல இவர் தன்னுடைய கட்டுரையைப் பார்த்து மகிழ்ந்தார். பல கட்டுரைகள் எழுதித் தாம் பணியாற்றிய இதழிலேயே வெளியிட்டார். இந்த எல்லா கட்டுரைகளும் சேர்ந்து ஒரே தொகுப்பாக நூல்மூலம் வெளிவந்தன. அதற்கு நிறைய வரவேற்பு கிட்டியது. உடனே செய்தியாளர் பணியை விடுத்து, முழு நேரமும் எழுதும் பணியில் நேரத்தைச் செலவிட்டார்.

இவருக்கு அகவை இருபத்துநான்கு நடக்கும்போது ஒரு நகைச்சுவைக்கட்டுரைத் தொகுப்பு (Pickwick paper) வெளியிட்டார். இது தொடர்ச்சியாக வெளிவந்தது இந்தக் கட்டுரை சுமந்து வெளிவந்த முதல் சில இதழ்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. சில திங்கள்கள் கழிந்தன. குமுகாய (சமுதாய)த்தில் உள்ள தவறுகளை இவர் நகைச்சுவையுடன் எழுதியதைக்கண்ட மக்கள் அதற்கு நிறைய வரவேற்பு அளித்தார்கள். இவர் புகழ் வானைமுட்டியது. இப்புகழ் காரணமாக இவர் மக்கள் பார்வையிலேயே எப்பொழுதும் வாழவேண்டிய நிலை வந்துவிட்டது. பிறகு ''கேதரின் ஒகார்த்'' என்பவரை 1836-ஆம் ஆண்டு ஏட்ரல் திங்கள் 2-ஆம் நாள் திருமணம் செய்துகொண்டார். இல்வாழ்வு இனிதே நடந்தது.

1838-இல் ''ஆலிவர் டுவிசுட்'' (Oliver Twist) என்ற நெடுங்கதை ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்தக் கதை இவரின்புகழ் என்ற காழத்திற்குப் பட்டை தீட்டுவதுபோல் அமைந்தது. இப்பொழுது இவருக்கு ஆங்கில இலக்கிய உலகில் ஒரு மேன்மையான இடம் கிடைத்துவிட்டது. பல ஆண்டுகளில் நிறைய எழுதிக் குவித்தார். அவற்றில் ''வியப்பான பழைய கடை'' (Old Curiosity Shop) என்ற நெடுங்கதை இவருக்கு இங்கிலாந்தில் மட்டுமன்று; அமெரிக்கா

விலும் புகழ் ஈட்டித்தந்தது- அதன்பயனுக் இவரை அமெரிக்கர்கள் தங்கள் நாட்டிற்கு அழைத்தனர். இவரும் 1842-ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு வருகை தந்தார். அங்கு இவருக்கு மிகச்சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது. பிறகு அவர் அமெரிக்க ஆட்சியில் வெறுப் படைந்து, இங்கிலாந்து திரும்பினர். ஆனல் இரண்டாவது முறை இவர் அமெரிக்காவிற்கு வருகை தந்தபோது நல்லெண்ணமும் நன்மதிப்பும் ஏற்பட்டது.

கடுமையாக உழைத்ததின் விளைவாக இவர் உடல் நோய்க்கும் கண்நோய்க்கும் ஆளாஞர். இருந்தும் இவர் தம் சொந்த இதழாக "குடும்பப் பேச்சு" (Family speak) என்ற கிழமை இதழைத் தொடங்கினர். இந்த நேரத்தில்தான் இவர் தம் இளமைவாழ்வை அடிப் படையாகக் கொண்டு "தாவிது காப்பர்பீல்டு" (David copper field) என்ற நெடுங்கதை எழுதினர். இஃது இவரின் எழுத்துத் திறமைக்குக் கொடுமுடியாக இன்றளவும் இலங்குகிறது. இப்பொழுதெல்லாம் அவர் கற்பனைக்கு மந்தம் ஏற்பட்டது. அமைதியின்மை அவர் வாழ்வின் உறவினஞக வந்தது. இருந்தும் இவர் அறக்கொடையாக இவரின் நகைச்சுவை கட்டுரைகளை (Pick wick papers) மேடையில் நடிக்க முன்வந்தார். இதற்கு நிறைய வரவேற்பு கிடைத்தது. அமெரிக்காவிலும் இவர் மேடைக்காட்சிகள் புகழ்பெற்றன. திரும்பவும் தாய்நாடுவந்து தம் கடைசிக் காட்சிகளை நடத்தி வந்தார். புகழ்மேல் புகழ்கிடைத்தது. ஆனுலும் இந்த மேடைக்காட்சிகள் நடத்தியதால் இவர் உடல்நிலை மேலும் சீர்குலைந்தது. ஒருநாள் அதாவது 1870-ஆம் ஆண்டு சூன் திங்கள் 8-ஆம் நாள் முழுவதும் கதை எழுதிய பின்னர் உணவு உண்ணும்போது திடீரென வலிகொண்டு நாற்காலியில் சாய்ந்தார். மறுநாள் காலை அவர் ஆவி இறைவனை நோக்கிச் சென்றது. குமுகாயத்தில் உள்ள குறைபாடுகளைத் தம் நகைச்சுவை எழுத்தின் மூலம் சுட்டிக் காட்டித் திருத்தம்செய்த இலக்கிய மேதை மறைந்துவிட்டார். அவர் மறைந்தாலும் அவருடைய படைப்புகள் இலக்கிய உலகில் நிமிர்ந்து நடந்து மக்களுக்கு மகிழ்வூட்டி வருகின்றன.

அதோ! நெடுந்தொலைவில் வாழ்க்கை யென்னும் தீப்பந்தம் எரிகின்றது. அதை முயன்று அடையுங்கள்! நீங்களும் சார்லசு டிக்கன்சு போல உங்கள் கையிலிருக்கும் தீப்பந்தத்தால் அறியாமை யென்னும் இருள்மிகுந்த இக்குமுகாயத்தில் அறிவென்னும் ஒளிச்சுடரைப் பரப்புங்கள்! புகழடைந்து மேன்மையான வாழ்வு வாழுங்கள்.




தம்பி, தங்கைகளே! கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வோர் ஈரடியும் ஒரு திருக்குறளாகும். ஆனால் அவை சரியாக இல்லாமல் எழுத்து எழுத்தாகச் சிதைந்து கிடக்கின்றன. அவ்வற்றில் உள்ள எழுத்துகளைக் கொண்டு சரிபடுத்தித் திருக்குறளை அமைத்துக் காட்டுங்கள் பார்க்கலாம்.

விடை அடுத்த இதழில்,

(1) இந்த வகை தேர்வு தீயில் வெளிசிந்த
சோகுறச்சியின் உறவு மகிழ்

(2) தானும் நல்லனும் எத்தானைத் தரும்பென்ற ஆ கேட்க
அருனை மைவை.

(3) ஆரும் துய்த்ததல் அக்கறம்ப்பும் சாலற் பொறறி வாயிழ்
கூர்ம் தங்கூறு.

(4) தினக்கே ஈதன் கய்ச்சான் பொறேன் துவரிழுன்
பென்மனை எட்டற தாக்கும்.

(5) தொடியார் வேலேந்தறுத்தல் கட்டளை கொங்கூழ்கனே
நே பையிற் கொரை

(6) இறை தூயெனும் இயம்பற்குஞ்சாது எதிறு உதிறுப்பி
பவ பதாம்.

(7) வடு நாடா நான்பட வளந்த நாரு நாடென்
பனளத்தடேநா.

(8) எல்லா வரையெல்லாஞ் சிறப்புரும் வள்ளுவர்செல்
செய் இல்லாருரை.

(9) கண்மை செய்யான் அயிர் தவற்றேய்த்திற்குரு
உறல் உற்ற நோ நோக்குறு.

(10) தண்ணின் வரும் தென்றலும் ஒக்கவத்தான்
உவந்தாலும் எ ஒரைஆனர்.




நீங்கள் சிறுபருவம் உடையவர்கள்! அதற்காகப் பெரியசெயலைச் செய்யத்தயங்க வேண்டா. சிறியோர்களெல்லாரும் வரலாற்றில் பல பெரிய செயல்களைச் செய்துள்ளனர்; புகழ் அடைந்துள்ளனர். ஆகையால் நீங்களும் அரிய பெரிய செயலைச் செய்ய முயலுங்கள். முயற்சி திருவினையாக்கும். கீழுள்ள குறிப்புகளைப் பாருங்கள்.

1 நம் நாட்டில் பத்து ஆண்டுகள் கல்வி அமைச்சராய்ப் பணியாற்றிய அபுல் காலம் ஆசாத்து தம் பதினான்காம் அகவையிலேயே புகழ் பெற்ற தாளிகை ஒன்றின் ஆசிரியராய் இருந்தார்.

2 புகழ் பெற்ற பிரஞ்சுப் பாடலாசிரியர் விக்டர், யூகோ பிரஞ்சு அகாதமிக்கு முதல் முறையாகப் பாட்டொன்று எழுதி விடுத்தார். அப்பொழுது அவருக்கு பதினைந்து அகவை.

3 பெருமறவன் அலெக்சாண்டர் கிரேக்கப்படைகளுக்குத் தலைமை தாங்கியது அவனுடைய பதினாறாவது அகவையில்.

4 கலிலியோ அவருடைய பதினேழாவது அகவையின் பொழுது தான் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடித்து வெளியிட்டார்.

5 சோன் ஆப் ஆர்க்கு, பிரஞ்சுப்படைகளுக்குத் தலைமையேற்று போர்முரசு கொட்டினாளே! அப்பொழுது அவளுக்கு அகவை பதினெட்டு.

6 இசுடீவன்சன் நீராவியால் ஓடும் புகைவண்டிப் பொறியைச் செய்யுங்கால் அவருக்குப் பத்தொன்பதாம் ஆண்டு நடந்து கொண்டு இருந்தது.

7 புரட்சிமிகுந்த தம் கருத்துகளைக் கட்டுரைகள் மூலம் வெளியிட்ட வாசிங்டன் இர்விங் கின் அன்றய அகவை இருபது.

8 'பித்தோவன்' இசை உலகின்புகழ் உச்சிக்குச்சென்ற பொழுது இருபத்தோராண்டு அகவைதான் நடந்தது அவருக்கு.

9 'நோபல்பரிசை'த் தோற்றுவித்த ஆல்பர்ட் நோபல் அவரின் இருபத்து இரண்டாவது அகவையில் வெடி மருந்தைக் கண்டு பிடித்தார்.

10 'சூலியசு சீசர்' ஐரோப்பாவையே அஞ்ச வைத்துப் போர்களில் மிகுதியான வெற்றி பெற்ற பொழுது அவருக்கு அகவை இருபத்து இரண்டு.

11 இருபத்து நான்காம் அகவை நடந்து கொண்டிருந்த பொழுது தான் புவி ஈர்ப்பு ஆற்றலைக் கண்டு பிடித்தார், சர் ஐசக் நியூட்டன்.

( தொகுப்பு: நாற்றமிகு செம்பியன் )

# பயன் மொழிகள்.

0 முயன்று கற்றவற்றைக் கடைப்பிடிக்காது, மேலும் விரும்பிக் கற்கத் தொடங்குதல், கையிலிருந்த, முயன்று தேடிய பொருளைக் கொட்டிவிட்டு சல்லடைகொண்டு வருந்திப்பொருள் திரட்டு வதையே ஒக்கும்.

0 மற்றவர்களால் தான் மிகவும் மதிக்கப்படல்வேண்டும் என்று விரும்புபவன் எப்பொழுதும் மறவாது கடைப்பிடிக்கவேண்டுவது ஒன்றுண்டு. என்னவென்றுல் மற்றவர்களுடைய சிறப்பையெல் லாம் வெளிப்படப்பேசி, அவர்களுடைய சிறுமைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு எல்லாரிடமும் பணிவாகப் பேசுதல் ஆகும்.

0 ஏமாற்றி ஒழுகும் அறிவிலாதவர்களே! யாவரையும் ஏமாற்றி விட்டோம்' என்று மகிழாதீர்கள்! ஏமாற்றுதலை எங்கும்நிறைந்த இறைவன் காண்பான் என்று அஞ்சி நடுக்கமுறுவதே அறி வுடைமையாகும்.

0 தம்மைவிட ஏழையரைப் பார்த்துத், தாம்பெற்ற செல்வம் மிக வும் பெரிதுஎன்று எண்ணி மகிழ்க! தம்மைவிட மிகுதியாகக் கற்றவரைப் பார்த்துத், தாம்கற்றதெல்லாம் இவர் கல்விக்கு முன்னுல் எத்தன்மைத்து? என்று உளம்வருந்துக!

0 அவையின்கண் அஞ்சிநடுங்குவார் கல்வியும், கல்லாதவர் அவைஅஞ்சாது பிதற்றுஞ்சொல்லும், குற்றத்துக்கஞ்சிப் பகுத் துண்ணுதவர்தம் செல்வமும், வறுமையுற்றவரது வாழ்க்கை நலமும் தோன்றிவெளிப்படுவதினும் தோன்றுமையே நன்மை யாகும்.

0 முழுதும் மணிகளால் இழைக்கப்பெற்ற அணிகலனுக்கு வேறு ஓர் அணிகலன் வேண்டா. அழகுக்கு அழகுசெய்பவர் யாரும் இலர். அதுபோலக்கற்றவர்களுக்கு அக்கல்வி அழகேஅழகாகும். அவர்களுக்கு வேறுஅழகு வேண்டியதில்லை.

0 துலாக்கோலில் மெலியபொருள் உள்ள தட்டுமேலே செல்லச் செல்ல வலியபொருளுடைய தட்டு கீழே தாழும். அதுபோல அறிவால் மிகுந்தவர்கள் சிறுமையாளரின் எடுப்பான போக்கைப்பார்த்தால் பணிந்துசெல்வர்.

( நீதிநெறிவிளக்கக் கருத்துகள் )

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1